மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்
EA No. 12/2013 in EP No. 9/2012.

பெயர் : செல்வராஜ்
சாட்சி – எ.ம.சா–1 நாள்: 24.11.2025

---

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. கடந்த 01.11.2010 ம் தேதியில் ராஜம்மாள் சின்னச்சாமி பெயருக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. ராஜம்மாள் சின்னச்சாமிக்கு எழுதிக்கொடுத்துள்ள மேற்படி செட்டில்மெண்ட் அவணத்தை ரத்து செய்துவிட்டதாக தெரிவித்து எ.ம.சா.ஆ.3 செட்டில்மெண்ட் ரத்து பத்திரத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரத்து பத்திரத்தில் நான் ஒரு சாட்சியாக கையெழுத்துப்போட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ரத்து பத்திரத்தில் சின்னச்சாமி ஒரு தரப்பினர் கிடையாது என்றால் சரிதான்.

2. ஒரு நபருக்கு கொடை ஆவணம் எழுதிக்கொடுத்து மேற்படி ஆவணம் அமல்படுததப்பட்ட பின்னர் ரத்து செய்யவேண்டுமாயின் கொடை ஆவணத்தை எழுதிக்கொடுத்தவரும், ஏற்றுக்கொண்டவரும் இணைந்து தான் ரத்து பத்திரம் செய்து கொள்ள முடியுமென்றும், கொடையாவணத்தை ஏற்றுக்கொண்டவர் சம்மதம் இல்லாமல் தன்னிச்சையாக அதனை எழுதிக்கொடுத்தவரால் ரத்து செய்ய முடியாது என்றால் சரியல்ல.

3. ராஜம்மாள் தற்போது வரை உயிருடன் தான் உள்ளார். ராஜம்மாளுக்கு எந்தவிவரமும் சொல்லாமல் நான் தான் அழைத்துச்சென்று எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. சின்னச்சாமி ராஜம்மாளை ஏமாற்றி தான் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வாங்கினார் என்று ராஜம்மாள் எந்த வழக்கும் தற்போது வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

4. நிறைவேற்று மனுவின் 2 வது அயிட்ட சொத்துவிவரத்தில் டி ஷெட்யூல் பாகத்திற்கும் வடக்கு என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் அது தவறானதாகும்.

மேற்படி சொத்துவிவரம் தவறானது என்று எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் தற்போது இன்று தான் தெரியவந்தது. சுப்பிரமணியம் மேற்படி சொத்துக்களை பதிவுசெய்யப்பட்ட உயில் மூலம் வசந்திக்கு எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி உயிலானது நடைமுறைக்கு வந்து, மேற்படி உயில் அடிப்படையில் வசந்தி சின்னச்சாமிக்கு கிரையம் எழுதிவைத்துள்ளார் என்றால் நீதிமன்றத்திலிருந்து 2013 ம் ஆண்டு சுவாதீனம் எடுக்க சென்ற போது தான் எனக்கு தெரியவந்தது.

5. மனுதாரர் தமிழரசி அவரது அப்பாவிடமிருந்து உரிய விலை கொடுத்து மேற்படி சொத்தினை கிரையமாக தான் வாங்கி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. சின்னச்சாமியிடமிருந்து சொத்தினை அபகரிக்க வேண்டுமென்பதற்காக விஜயாவை பயன்படுத்தி அவரிடம் போலியாக ஒரு கிரைய ஒப்பந்த ஆவணத்தை ஏற்படுத்தி, இருவரும் சேர்ந்து மேற்படி அசல் வழக்கில் மோசடியாக ஒரு தீர்ப்பை பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. விஜயா தற்போதும் உயிருடன் தான் உள்ளார்.

6. உரிமையே இல்லாத நபருடன் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டு, அதனடிப்படையில் பெற்ற தீர்ப்பாணையை நிறைவேற்ற முடியாது என்றால் சரியல்ல. நான் சுவாதீனம் கோரிய நிறைவேற்று மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றும், மனுதாரரின் இந்த கோரிக்கை மனு அனுமதிக்கப்பட வேண்டுமென்றும் சொன்னால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முடிவடைந்தது**

**மறு விசாரணை இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

V KALIDASAN

Digitally signed by V KALIDASAN
Date: 2025.11.24 18:29:12 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பல்லடம்.